**பலாங்கொட நகர சபையி - 2023**

-------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பலாங்கொட நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து பலாங்கொட நகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து

வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடப்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீண்டுவரும் தன்மையான இயந்திரங்களின் பராமரிப்புச் செலவு ரூபா 113,250 மூலதனமாக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | சரியாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா 641,893 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | ஆரம்ப மற்றும் இறுதியான ஆயுர்வேத மருந்து இருப்புக்கள் முறையே ரூபா 322,556 மற்றும் ரூபா 303,616 தொகைகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் ஆண்டின் போதான ரூபா 599,725 கொள்வனவுகள் செலவுகளுக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கதைத் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | சரியாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | கடன்கொடுத்தோர்களுக்கு 2022 ஆம் ஆண்டில் செலுத்திய ரூபா 1,392,773 தொகை 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியதாகக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (உ) | 03 நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டிய பணம் 5,186,322 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | 2022 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்பட்டோர் பெறுவனவுகள் ரூபா 108,109 தொகை 2023 ஆம் ஆண்டில் மீண்டும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | பெற்றுக்கொள்ளப்பட்ட பிணைப்பணம் ரூபா 250,000 வருமானத்திற்கு எதிரீடு செய்யப்பட்டிருந்தும் அது கணகீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஏ) | பணமாகச் செலுத்திய ரூபா 742,500 தொகையை முறைப்படியாக கணக்கீடு செய்து மீண்டும் அப்பணத்தை கடன் கொடுத்தோருக்கு செலவு வைத்து ஆண்டிற்கான செலவுகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஐ) | அடுத்துவரும் ஆண்டிற்கான காப்புறுதிக் கொடுப்பனவு ரூபா 196,596 தொகை 2023 ஆம் ஆண்டிற்கான செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஒ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 03 கணக்கு மீதிகளுக்கும் துணைப் பேரேடுகளின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறான அந்த மீதிக்குமிடையே ரூபா 3,024,685 வித்தியாசம் காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும் | இணக்கமின்மையானது இணக்கம் செய்யப்படுதல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ரூபா 498,499,763 மொத்த தொகையான 04 கணக்கு விடயங்களின் நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் விபரமான பட்டோலை சமர்ப்பிக்கப்படவில்லை. | சொத்துக்களுக்காக தனித்தனியாக பட்டோலைகளை வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்கள் பதிவேடும் பட்டோலையும் முறைப்படியாக பேணப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவுகள் ரூபா 905,463 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 4,227,487 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்த வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறா ன மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறா ன மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரியும் வரியும் | 13,145,000 | 11,352,210 | 11,452,200 | 6,119,239 | 10,777,000 | 11,611,507 | 12,335,139 | 6,156,320 |
| வாடகை | 37,792,000 | 41,884,327 | 41,395,622 | 488,705 | 36,096,000 | 35,675,467 | 34,481,551 | 860,427 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 2,690,000 | 2,077,137 | 2,135,001 | - | 2,285,000 | 1,534,728 | 1,379,728 | - |
| ஏனைய வருமானம் | 29,501,000 | 29,180,168 | 35,278,760 | - | 27,030,000 | 24,701,612 | 24,957,583 | - |
| மொத்தம் | 83,128,000 | 84,493,842 | 90,261,583 | 6,607,944 | 76,188,000 | 73,523,314 | 73,154,001 | 7,016,747 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டு மற்றும் 2023 ஆம் ஆண்டு தொடர்பாக நிலுவையான வீதவரியும் வரியும் ரூபா 6,119,240 அறவிடப்பட்டிருக்காததுடன் அதன் காலப்பகுப்பாய்வும் தயாரிக்கபட்டிருக்கவில்லை. | புதிய வீதவரி மென்பொருள் பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் காலப்பகுப்பாய்வினை மேற்கொள்வேன். | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஒரு கடை கேள்வி கோரப்படாது 2017 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த கட்டணத்தை திருத்தம் செய்தும் உடன்படிக்கையை புதுப்பித்தும் ஒரே நபருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | அது சபைத் தீர்மானமாகும். | கடை கேள்வி கோரி வழங்கப்படுதல் வேண்டும். |
| (இ) | கட்டணத்தை அறவிடுகின்ற நடைமுறையானது வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசித்தப்படுத்தியிருந்தும் அதற்கு முரணாக டிஜிடல் விளம்பர பலகையின் கட்டணத்தை தீர்மானித்ததனால் 2021 யூலையிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்காக ரூபா 510,720 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | தலைவரினால் ஒரு சதுர அடிக்கு வருடாந்த கட்டணம் ரூபா 200 ஆக கருதி கட்டணத்தை அறவீடு செய்வதற்கு எழுத்து மூலம் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. | ஏற்பட்டுள்ள நட்டத்தை பொறுப்புக்கூற வேண்டிய நபரிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பொது பயன்பாட்டு சேவை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் வீதிகளில் மழைநீர் வடிகாண் முறைமையை நிர்மாணிகும் செயல்முன்னேற்றம் 20 சதவீதம் மற்றும் காணப்படுகின்ற வடிகாண்களை பராமரிக்கும் செயல் முன்னேற்றம் 54 சதவீதம் ஆக குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | அரசாங்கம் செலவுகளை மட்டுப்படுத்துதல் இதற்கு காரணமாக இருந்தது. | அத்தியசவியமான பொது வசதிகள் தொடர்ச்சியாகப் பேணப்படுதல் வேண்டும். |

### 3.2 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2019 - 2020 ஆண்டு காலத்தில் கொள்வனவு செய்த ரூபா 231,175 தொகையான மின்சார துணைக் கருவிகள் இன்றுவரை பயன்படுத்தப்படாது காணப்பட்டன. | எதிர்காலத்தில் பயன்படுத்தப்படும் என தெரிவிக்கிறேன். | சொத்துக்கள் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திருத்த வேலைகளுக்காக 2023 பெப்ரவரி மாதத்தின் போது மூடப்பட்டிருந்த பலாங்கொடை வாடி வீட்டின் அந்த திருத்த வேலைகள் 2023 ஒக்தோபர் வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. வாடிவீடு திறக்கப்பட்டிருக்காததனால் மாதாந்தம் ரூபா 300,000 அளவிலான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | அந்த திருத்த வேலைகளுக்கான அங்கீகாரத்தினையும் அதற்கு தேவையான கடன் வசதிகளையும் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சொத்துக்கள் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |